## சட்டமன்றம் ஆரோக்கியமாக நடைபெற

# ஆளுங்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – எ.வ.வேலு அறிவுறுத்தல்!

சென்னை, ஆக.27-

சட்டப்பேரவையில் - கழகக் கொறடா எ.வ.வேலு பேசுகையில், "சட்டமன்றம் ஆரோக்கியமாக நடக்க ஆளுங்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

கடந்த முறை தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேவைப்படும் பணிகளை எழுதித் தாருங்கள் எனக் கூறி அனைத்துத் தொகுதிகளுக்கும் பணிகளைச் செய்து கொடுத்தார்.

இங்கு சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியினர் செய்யும் குறைகளை சுட்டிக்காட்டவும், பொதுமக்கள் பணிகள் குறித்த கேள்வி கேட்கவும் தான் நாங்கள் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம் " அதற்கு பதில் சொல்ல வேண்டியது அமைச்சர்களுடைய கடமை, ஆனால் அமைச்சரே பிரச்சினையை உருவாக்குகிறார் என்றால் அது தவறான நடைமுறையாகும்.

குறிப்பாக பொதுப்பணித் துறை அமைச்சர் பேசும்போது பொத்தாம் பொதுவாக மதுரையில் உள்ள முன்னாள் அமைச்சர் மீது குறை சொல்கிறார். அவர் சொல்வது உண்மையாக இருந்தால் பெயரைச் சொல்லி குறிப்பிடலாமே.

நாங்களெல்லாம் சட்டமன்றத்திற்கு காலை 9 மணிக்கு வந்துவிடுகிறோம். மாலை 6.00 மணி வரை பொறுப்பாக சட்டமன்றத்தில் உட்கார்ந்திருக்கிறோம். அம்மையார் ஜெயலலிதா இருந்த காலத்தில் மாலை 4 மணிக்கு எல்லாம் நாங்கள் புறப்பட்டு சென்று விடுவோம்.

ஆனால் தற்பொழுது இளைஞர்கள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று பார்க்கத்தான் இங்கு அமர்ந்திருக்கிறோம். எதிர்க்கட்சியை விட ஆளும் கட்சிக்கு தான் பொறுப்புகள் அதிகம். எதிர்க்கட்சியாகிய நாங்கள் கேள்வி கேட்கதான் செய்வோம் குறைகளை சுட்டிக்காட்டதான் செய்வோம். அதுதான் எதிர்க்கட்சியின் உடைய பணிகள், ஓடுகிற மாட்டிற்கு மூக்கணாங்கயிறு போலத்தான் எதிர்க்கட்சிகள் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்.

அதன் அடிப்படையில் தான் எதிர்க்கட்சிகள் ஆகிய நாங்கள் தவறுகளை சுட்டிக்காட்டி கேள்வி கேட்கத்தான் செய்வோம். ஆனால் அதற்காக புதிதாக சட்டமன்ற உறுப்பினராக வந்துள்ள, சட்டமன்ற மரபு குறித்து தெரியாத உறுப்பினர்கள் எங்களைப் பார்த்து ஓடி வருவது என்பது சரியான நாகரீகமாக இருக்காது.

எனவே ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு அமைச்சர்களுக்கு இருக்கிறது. இந்த சட்டமன்றம் ஆரோக்கியமான சட்டமன்றமாக இருக்க வேண்டும் என்பது எதிர்க்கட்சிகளாகிய எங்களது விருப்பம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## இஸ்லாமியர்களை ஆதரிக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.!

# த.வெ.க. எம்.எல்.ஏ. பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடுவதா?

## இராமேஸ்வரம் நகர் மன்றத்தலைவர்–நகரச் செயலாளர் கே.இ.நாசர்கான் கண்டனம்!

இராமேஸ்வரம், ஆக. 27-

''இஸ்லாமியர்களை ஆதரிக்கும் ஒரே இயக்கம் தி.மு.க. என்றும் உண்மை தெரியாமல் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் பொய் மூட்டைகளை அவிழ்த்து வருவதா?'' என்றும் இராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவரும் நகரச் செயலாளருமான கே.இ.நாசர்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இஸ்லாமிய மக்களுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்து கண்ணியமிக்க காயிதேமில்லத் சாகிப் அவர்கள் ஏற்படுத்தி வைத்த உறவு. அதனை தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் அந்த உறவை பாதுகாத்து வந்தார்.

1, இஸ்லாமிய மக்களுக்கு உள் ஒதுக்கீடு 3.5, சதவீதம்,2. வக்பு வாரியம் ஏற்படுத்தி அதனை சிறப்பாக வழி நடத்தினார்,3. மீலாது விழாவிற்கு அரசு விடுமுறை வழங்கினார்,4, ஹஜ் பயணிகள் எண்ணிக்கை உயர்த்தி,சென்னையில் தங்கி செல்வதற்கும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கினார்,5.உருது அகடாமி அமைத்து கொடுத்து, அவர்களுக்கு உதவிச் செய்தார்,6. பள்ளிவாசலில் பணி புரியும் உலமாக்களுக்கு மாதம் தோறும் உதவித்தொகை வழங்கினார்,7.ரம்ஜான் பண்டிகை காலங்களில் நோம்பு கஞ்சி காச்சுவதற்கு விலையில்லா அரிசி சிவில் சப்ளை மூலமாக வழங்கினார்.8. கண்ணியமிக்க காயிதேமில்லத் சாகிப் அவர்கள் நினைவிடத்தில் மணிமண்டபம் அமைத்து கொடுத்தார்.9. சிறுபான்மை இன மக்களின் வாழ்வாதாரம் கருத்தில் கொண்டு சிறுபான்மை நலவாரியம் அமைத்து கடன் உதவிகள் வழங்கச் செய்தார்.10.மதவாத சக்திகள், தமிழ்நாட்டில் கடுகளவும் இடம் கொடுக்காமல் இஸ்லாமிய மக்களுக்கு அரனாக இருந்து வந்தார்.

11. இந்தியாவே மதக்கலவரத்தில் சூறையாடி, சிறுபான்மை மக்கள் தன்னுடைய பொருளாதாரத்தை இழந்த போது, தமிழ்நாட்டில் மட்டும் அதற்கு இடமளிக்காமல் சகோதர பாசத்துடன் நிலைநாட்டி அமைதி பூங்காவாக உருவாக்கி காட்டியவர்,12.SIR, CAA, போன்ற கொடிய சட்டங்கள் மூலமாக இஸ்லாமிய மக்கள் மீது பழிதீர்க்க ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வந்த போது அதை எதிர்த்து கண்டன குரல் கொடுத்து, தமிழ்நாட்டில் அமல்படுத்த மாட்டோம். என உரத்த குரலில் அறிவித்தார். தளபதி அவர்கள்.


13. திருப்பரங்குன்றம் மத நல்லிணக்கம் கொண்ட தமிழ்நாட்டில், உயர்நீதி மன்ற உத்தரவை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்து அமைதி ஏற்பட வழிவகை செய்தவர். அன்றைய முதல்வர் தளபதியார். 14. இஸ்லாமிய மக்கள் யார் பக்கம் என்பதை கடந்த கால தேர்தல் நிருபித்து உள்ளது. எந்தெந்த தொகுதிகளில் இஸ்லாமிய மக்கள் பெருமளவில் வசிக்கிறார்களோ அந்த தொகுதிகளை தி.மு.க. கைப்பற்றி வெற்றி வாகை சூடியது. அதற்கு காரணம் இஸ்லாமிய மக்கள் தி.மு.க. பக்கம் தான் நாங்கள் என்பதை உறுதி செய்தார்கள். கழகத்தலைவர் தளபதியார் அவர்களுக்கு கரம் கொடுத்தார்கள்.

15.இன்று இஸ்லாமிய மக்கள் தலைவர் கலைஞர் மீதும், தளபதியார் மீதும், தி.மு.க. மீதும் அசைக்க முடியாத பாசத்துடன் நேசத்துடன் இருப்பதற்கு காரணம் காலங்காலமான உறவே. இப்படிப்பட்ட நிலையில் தற்போது முன்னாள் முதல்வர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களும், இளம்தலைவர், எதிர்க்கட்சிதலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களும், இஸ்லாமிய மக்களுடன் இணைந்து கடந்த கால நட்புடன் உறவை பாதுகாத்து அரனாக இருந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல் வடிவம் தந்து கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி இருக்க உண்மைக்கு மாறாக சட்டமன்றத்தில் தற்குறியாக எந்த விவரமும் இல்லாமல் தான்தோன்றித்தனமாக பொய் மூட்டைகளை அவிழ்த்து விடும் தற்குறி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் முஸ்தபாவை வன்மையாக கண்டிக்கிறோம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர். ராமதாஸ்
### ஆகஸ்ட் 27 (2016)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திருவள்ளூரில் சான்றிதழ்கள் வழங்குவதில் காலதாமதம்!

திருவள்ளூர், ஆக.27–

திருவள்ளூர் நகரில் வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு அரசு சான்றிதழ்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தும், நீண்ட நாட்களாக சான்றிதழ்கள் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த பின்னர், தங்களது விண்ணப்பத்தின் நிலையை தெரிந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளை நேரில் அணுக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு சான்றிதழுக்காக பலமுறை அரசு அலுவலகங்களுக்கு சென்று வர வேண்டியுள்ளதாகவும், ஒவ்வொரு முறையும் அதிகாரிகளை சந்தித்து விண்ணப்பத்தின் நிலை குறித்து விசாரிக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் புகார் கூறுகின்றனர். இதனால் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கல்வி, வேலைவாய்ப்பு, அரசு நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக குறிப்பிட்ட காலத்திற்குள் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டிய நிலையில், சான்றிதழ் வழங்குவதில் ஏற்படும் தாமதம் தங்களது பணிகளை பாதிப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

மேலும், அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி பொறுப்பேற்றது முதல் அதிகாரிகள் மெத்தனமாக செயல்பட்டு வருவதாக பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஆன்லைன் விண்ணப்பங்களை உடனடியாக ஆய்வு செய்து, தகுதியானவர்களுக்கு சான்றிதழ்களை விரைந்து வழங்க வேண்டும் என்றும், விண்ணப்பத்தின் நிலையை அறிந்து கொள்வதற்காக பொதுமக்கள் மீண்டும் மீண்டும் அலுவலகங்களுக்கு வர வேண்டிய நிலையை தவிர்க்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

திருவள்ளூர் நகரில் பொதுமக்களின் சான்றிதழ் தொடர்பான குறைகளை மாவட்ட நிர்வாகம் நேரடியாக ஆய்வு செய்து, காலதாமதத்திற்கான காரணத்தை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# கூட்டணிக் கட்சிகளோடு த.வெ.க.வின் கள்ள ஆட்டமும் - தேசிய அரசியலில் போடும் வேஷமும்!

சட்டமன்றத்தில் தினமும் நாடகம் போடுவது யார் என்பதில் நான்கு அமைச்சர்களுக்கு இடையே சுழற்சி முறையில் ஒரு ஏற்பாடு இருக்கிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் ஆதவ் அர்ஜுனா முறை வந்தபோது, த.வெ.க. சார்பில் நாடகம் போட கையில் திரைக்கதை (Script) எதுவும் இல்லை.

எனவே, காங்கிரஸ் உறுப்பினருக்கும் த.வெ.க. உறுப்பினருக்கும் இடையிலான ஒரு விவாதத்தில் சம்பந்தமே இல்லாமல் இடையே புகுந்து 'நடித்துக் காட்டிய' காட்சியைக் கண்டோம். ஆனால், இதுவும் ஒருவகையில் த.வெ.க.வின் நாடகமே.

காங்கிரஸ் உறுப்பினரும் அமைச்சருமான விஸ்வநாதன் தி.மு.க.விற்கு எதிரான சில கருத்துகளைக் கூறியபோது, தி.மு.க. உறுப்பினர் கோவி. செழியன், "மேலூர் தொகுதியில் தி.மு.க. தொண்டர்களால் வெற்றி பெற்று, இன்று அமைச்சராகி உள்ளீர்கள். கருப்பு-சிவப்பு வேட்டி கட்டிய தொண்டனின் உழைப்பே அதற்குப் பின்னணியில் உள்ளது" என்றார். இதற்குப் பதில் சொல்ல வேண்டியவர் அமைச்சர் விஸ்வநாதன். ஆனால், ஆதவ் அர்ஜுனா வழக்கம் போல ஒலிபெருக்கியைப் பிடித்துக்கொண்டு, தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் எப்படியெல்லாம் தி.மு.க.விற்கு உதவின என்று அளந்துவிட ஆரம்பித்தார்.

இந்தக் கூட்டணிக் கட்சிகளின் வாக்கு சதவீதம் எவ்வளவு சிறியது என்பது தி.மு.க.விற்கும் தெரியும்; அதன் முன்னாள் கூட்டணிக் கட்சிகளுக்கும் தெரியும். காங்கிரஸின் வாக்கு சதவீதம் தெரிந்தும், அதன் தகுதிக்கு மீறி தி.மு.க. இடங்களை ஒதுக்கியதற்குக் காரணம், தேசிய அளவில் மதச்சார்பற்ற ஒரு கூட்டணியை வலிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகவே! அனைத்துக் கூட்டணிக் கட்சிகளையும் அவற்றின் வாக்கு வங்கியைப் பற்றிக் கவலைப்படாமல், தி.மு.க. அதிக இடங்களை ஒதுக்கித் தந்தது. ஆனால், தி.மு.க. கூட்டணியில் 28 இடங்களைப் பெற்றும் காங்கிரஸ் களத்தில் எந்த வேலையும் செய்யவில்லை. ராகுல் காந்தி கடைசியில் ஒப்புக்கு ஒன்றிரண்டு இடங்களில் பிரச்சாரம் செய்துவிட்டு, கூட்டணியின் வெற்றிக்காக எந்தப் பங்களிப்பையும் செய்யவில்லை.

கூட்டணியின் வெற்றிக்குத் தன் கட்சித் தொண்டர்கள் சரியாக வேலை செய்யவில்லை என வி.சி.க. தலைவர் திருமாவளவன் வெளிப்படையாகவே ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். தி.மு.க. தலைவரும் இளைஞரணிச் செயலாளரும் இந்தக் கட்சிகளின் வெற்றிக்காகக் களத்தில் நின்று தமிழ்நாடு முழுக்கப் பரப்புரை செய்தார்கள். த.வெ.க. அமைச்சரவையில் இருக்கும் வி.சி.க.வின் வன்னியரசு தினமும் தி.மு.க.விற்கு எதிராகப் பேசுகிறார். ஆனால், இவரது வெற்றிக்காக உதயநிதி ஸ்டாலின் எத்தகைய உணர்ச்சிமிக்கப் பரப்புரையை மேற்கொண்டார் என்பது மனசாட்சியுள்ளவர்களுக்குத் தெரியும்.

ஆனால், தேர்தலுக்குப் பின் தன் பக்கம் ஆசை காட்டிஇழுத்துக்கொண்ட அன்றையதி.மு.க. கூட்டணிக் கட்சிகள் குறித்துத் தேர்தல் பிரச்சாரத்தின்போது விஜய் என்ன சொன்னார் தெரியுமா?

"அண்ணா அறிவாலயம் பக்கம் நிழலுக்கு ஒதுங்கினால் கூட தி.மு.க.வினர் கூட்டணியில் சேர்த்துக்கொள்கிறார்கள். தி.மு.க. கூட்டணி என்பது கல்லாப்பெட்டி கூட்டணி" என்றார் விஜய்.

ஆதவ் அர்ஜுனா ஒருபடி மேலே போய் வி.சி.க. பற்றிப் பேசிய கருத்து இது: "திருமாவளவன் அவர்களே, நீங்கள் என்னை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டிக்கொள்ளுங்கள். ஆனால், உங்களுடைய கட்சி இங்கு மாறி ரொம்ப நாளாகிவிட்டது. நீங்களும், 20 பேருமே மட்டுமே கட்சியில் இருக்கிறீர்கள்."

அந்த ஆதவ் அர்ஜுனாதான் இப்போது சட்டமன்றத்தில் அன்றைய தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் 'யானை, குதிரை' என்று அளந்துவிடுகிறார். ஏன் இந்த பசப்பு நாடகம்?

கடந்த சில நாட்களாகத் த.வெ.க. கூட்டணிக் கட்சிகளுக்கும் த.வெ.க.விற்கும் இடையே கடும் முரண்பாடுகள் எழுந்துள்ளன. இடதுசாரிகளைக் கணக்கெடுக்க அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, இடதுசாரி மாணவர் போராட்டங்களைக் கண்காணித்து ஒடுக்க அனுப்பப்பட்ட சுற்றறிக்கை ஆகியன கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கடும் அதிர்ச்சியடைய வைத்துள்ளன. கூட்டணியில் தொடர்வதா இல்லையா என்ற அளவுக்கு அக்கட்சிகளுக்குள் விவாதங்கள் எழுந்துள்ளன.

அடுத்ததாக, 'விஜய்தான் அடுத்த பிரதமர்' எனத் த.வெ.க.வினர் ஆரம்பித்திருக்கும் பிரச்சாரம் காங்கிரஸ் கட்சியை நெளிய வைத்திருக்கிறது. த.வெ.க. அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் என வரிசையாக இந்தக் கருத்தை வழிமொழிய ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு எம்.பி. கூட இல்லாத த.வெ.க.வின் தலைவர் எப்படிப் பிரதமராவார் என்றோ, அல்லது அப்படியே 40 எம்.பி.க்கள் அடுத்த தேர்தலில் வென்றாலும் அது எப்படிச் சாத்தியம் என்றோ இந்தக் கற்பனைக் கோட்டையைக் கட்டுபவர்களுக்குக் கவலை இல்லை. 2014ல் ஜெயலலிதா தானே பிரதமர் வேட்பாளர் என முழங்கிய அதே ' ஸ்க்ரிப்ட்'

ஆனால், 2019-இல் காங்கிரஸே சொல்வதற்கு முன்பே 'இந்தியா' கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் ராகுல் காந்திதான் என அறிவித்த மகத்தான தலைவருக்குத் துரோகம் செய்த ராகுல் காந்திக்கும் காங்கிரஸிற்கும் இது தேவையான ஒன்றுதான்.

விஜய் பிரதமராக வேண்டும் என்ற இந்தப் பிரச்சாரத்தால் வெகுண்டெழுந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர், "த.வெ.க.வினர் இன்னும் ரசிகர் மனநிலையிலேயே உள்ளனர். தேர்தல் முடிவுகள் வெளியானபோது, காங்கிரஸ் மட்டும் முதல் ஆளாக ஆதரவு கொடுக்காமல் இருந்திருந்தால், அமித் ஷா த.வெ.க.வின் கதையை முடித்திருப்பார்" என்றார்.

இவ்வாறு கூட்டணிக் கட்சிகளுக்கும் தங்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் கொதிநிலையைத் தணிக்கத்தான், தி.மு.க.வை இழுத்து, கூட்டணிக் கட்சிகளுக்காக ஆதவ் அர்ஜுனா குரல் கொடுக்கும் போலி நாடகத்தை அரங்கேற்றுகிறார்.

விஜய் பிரதமர் வேட்பாளாரா?


தமிழ்நாட்டைத் தாண்டிப் புதுச்சேரியில் கூட வெற்றி பெற முடியாத த.வெ.க.வினர், தாங்கள் தமிழ்நாட்டில் செய்த உருட்டுகளையும் புரட்டுகளையும் இன்று வடஇந்தியாவில் சமூக வலைத்தளங்கள் மூலம் மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டில் நடைபெறவே இல்லாத சம்பவங்களையெல்லாம் நடந்ததாகக் கட்டுக்கதைகளாகப் பரப்பி வருகின்றனர்.

- "தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் நபர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் உடனடியாகத் தூக்குத் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்."
- "தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பலனின்றி நோயாளி உயிரிழந்தால், அந்த மருத்துவமனைக்கட்டணத்தை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது அரசே ஏற்கும் என விஜய் உத்தரவிட்டுள்ளார்."
- "தமிழ்நாட்டில் பசுவதைத் தடையை அமல்படுத்தக் கோரி விஜய் சென்னை உயர் நீதிமன்றத்தை நாடினார்."
- "பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்துப் பிரதமர் நரேந்திர மோடியை நேரடியாகவும் ஆக்ரோஷமாகவும் விஜய் மிரட்டினார்."
- "தமிழ்நாட்டில் உள்ள மசூதி இமாம்களுக்கு அரசுப் பொதுப் பணத்திலிருந்து மாதாந்திரச் சம்பளம் வழங்க விஜய் உத்தரவிட்டுள்ளார்."

— இப்படி எண்ணற்ற பொய்கள் வடஇந்திய ஊடகங்களில் சமூக வலைத்தள செல்வாக்காளர்கள் (Social Media Influencers) மூலம் பரப்பப்படுகின்றன.

'இந்தியா டுடே' (India Today) போன்ற முன்னணி ஊடகங்களின் உண்மைச் சரிபார்ப்பு (Fact Check) ஆய்வில், பல வடஇந்திய ஐடி (IT) கணக்குகள் ஒரே மாதிரியான வசனங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) சிறுபடங்களைப் (Thumbnails) பயன்படுத்தி இத்தகைய பொய் செய்திகளைப் பரப்புவது அம்பலமாகியுள்ளது. வடஇந்திய ஆங்கில, இந்தி ஊடகங்களும் தொடர்ந்து த.வெ.க.விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

**மனுஷ்யபுத்திரன்**
மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல்
தொழில்நுட்ப அணி



'கோடி மீடியா' என அழைக்கப்படும் வடஇந்திய பா.ஜ.க. ஆதரவு ஊடகங்கள் இதை ஏன் செய்கின்றன? மேலும், வடஇந்தியாவில் பா.ஜ.க.வின் சமூக வலைத்தளக் கட்டமைப்பு மிக வலிமையானது; அவை மோடிக்கு எதிராக விஜய் என்ற ஒரு பிம்பம் வளர்வதை விரும்பாதே! அப்படியெனில், என்ன பின்னணியில் இது நடக்கிறது?

பா.ஜ.க.வின் அரசியல் வெற்றிகள் என்பது எதிர்த் துருவங்களை உருவாக்குவதன் மூலமே நிகழ்கின்றன. கடந்த சில ஆண்டுகளாகவே தமிழ்நாட்டை ஒரு எதிர்த் துருவமாக நிறுத்தியே பா.ஜ.க. வடமாநிலங்களில் பிரச்சாரங்களை மேற்கொண்டது. அதில் சிலவற்றை நினைவுகூர்வோம்:

1. ஒடிஷா பிரச்சாரம்: ஒடிஷா மாநிலத் தேர்தல் பிரச்சாரம் ஒன்றில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், "ஜெகன்னாதர் ஆலயக் கருவூலம் தொடர்பான நிகழ்வுகளைப் பார்த்து, ஒட்டுமொத்த ஒடிஷா மக்களும் கோபத்தில் உள்ளனர். அந்தக் கருவூல அறையின் சாவி தமிழ்நாட்டிற்குச் சென்றுவிட்டதாகக் கூறுகின்றனர். இதைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பியவர்கள் யார்? கொண்டுபோனவர்கள் யார்? இப்படிப்பட்டவர்களை நீங்கள் மன்னிப்பீர்களா?" என்றார். ஒடிஷாவில் ஆளுங்கட்சியாக இருந்த பிஜு ஜனதா தளத்தில் சக்திவாய்ந்த நபராகவும், முதல்வர் நவீன் பட்நாயக்கிற்கு நெருக்கமான முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான தமிழ்நாட்டைச் சேர்ந்த வி. கார்த்திகேயன் பாண்டியனைக் குறிப்பிடும் வகையிலேயே பிரதமர் அவ்வாறு பேசினார். இது தேர்தலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. சனாதன விவாதம்: தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் சமூக நீதி சார்ந்து சனாதனம் குறித்துப் பேசிய பேச்சு திரிக்கப்பட்டு, இந்து மதத்திற்கு எதிரான பேச்சாக வடஇந்திய ஊடகங்களில் பரப்பப்பட்டது; வழக்குகள் தொடுக்கப்பட்டன. பா.ஜ.க. இதனைத் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தியது.
3. போலித் தகவல்கள்: தமிழ்நாட்டில் வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதாக வடஇந்தியாவில் போலி காணொளிகள் பரப்பப்பட்டன.

இதேபோன்ற ஒரு எதிர்நிலையைத் தமிழ்நாட்டிலிருந்து உருவாக்கவே 'விஜய்' என்ற போலி பிம்பம் வடநாட்டில் ஊதிப்பெருக்கப்படுவதைப் பா.ஜ.க. ரசிக்கிறது. இதுவரை தமிழ்நாட்டில் மதவாத அரசியலுக்கு இடமில்லாமல் இருந்தது. ஆனால் இப்போது 'விஜய்' என்ற போலி பிம்பத்தைக் கிறிஸ்தவ மத பிம்பமாக வடநாட்டில் சித்தரித்து, அதற்கு எதிராக இந்துத்துவா வாக்கு வங்கியை திரட்டக்கூடிய சூழல் உருவாகி வருகிறது.

தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகளைப் பலவீனப்படுத்த விஜய்யின் சினிமா பிம்பம் பா.ஜ.க.விற்குப் பயன்பட்டது போல, வடஇந்தியாவில் பா.ஜ.க.விற்கு வலிமை சேர்க்க விஜய்யின் கிறிஸ்தவ மத பிம்பம் பயன்படும். அதற்காகத்தான் விஜய் அங்கு முன்னிலைப்படுத்தப்படுவதற்குப் பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெகுவிரைவில் இந்தக் காட்சிகள் அரங்கேறும்!